அனுப்புநர்:-

R. நாராயணன் @ ஸ்ரீ நித்திய சாம்பவானந்தா,
நித்தியானந்த தியான பீடத்தின் பிரதிநிதி என்ற முறையில்,
நித்தியானந்த தியான பீடம்,
அன்புநகர்,
நவலூர் குட்டப்பட்டு,
திருச்சிராப்பள்ளி - 9

பெறுநர்:-

மாண்புமிகு. தமிழக முதவர்கள் அவர்கள்,
தனிப்பிரிவு-தமிழக அரசு தலைமை செயலகம்,
சென்னை.

ஐயா,

பொருள்: எங்களது உரிமையிலும், அனுபவத்திலும் அத்துமீறி நுழைந்து இடையூறு செய்து, கொலைமிரட்டல் விடுத்துவரும் எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க கோருதல் தொடர்பாக...

நான் பி.ஏ.பட்டதாரி. எனது பூர்வீக ஊர் காரைக்குடி. ஏற்கனவே குடும்பத்துடன் பெங்களூரில் வசித்து வந்து, எனது திருமணத்திற்கு பின்னர் வியாபாரம் நிமித்தம் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு சென்னைக்கு தனிக்குடித்தனம் வந்துவிட்டேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நித்தியானந்த தியான பீடத்துடன் தொடர்பு ஏற்பட்டு, தற்பொழுது முழுமையாக நித்தியானந்த தியான பீடத்தின் நிர்வாக பொறுப்பில் இருந்து வருகிறேன்.

எங்களது நித்தியானந்த தியான பீடத்திற்கு, பீடத்தின் பக்தர்களான திருச்சி நவலூர் குட்டப்பட்டு கிராமத்தை சேர்ந்த ராசு உடையார் மகன் செல்வமணி, செல்வமணி மகன் ஜெகதீஸ்வரன், மகள் பிரியங்காதேவி, (லேட்).வைத்தியலிங்கம் மனைவி தனலெட்சுமி, தனலெட்சுமியின் மகள்கள் சசிகலா, சசிரேகா, மகன் ரஞ்சித் ஆகிய ஏழு நபர்கள்களும் சேர்ந்து தங்களுக்கு சொந்தமான சொத்தினை, தியான பீடத்தின் மற்றொரு பக்தரான வையாபுரி மகன் தனுஷ்கோடி என்பவருக்கு கடந்த 29.06.2007-தேதியில் கொடுத்த பதிவுற்ற ஜெனரல் பவர் பத்திரத்தின் அடிப்படையில், மேற்கண்ட பவர் ஏஜெண்ட் தனுஷ்கோடி முதலாவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு கடந்த 29.06.2007-தேதியில் நித்தியானந்த தியான பீடத்திற்கு ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி எழுதி கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட ஆவணத்தின்படி சொத்தினை அடைந்து, எங்களது தியான பீடம் அது முதல் அமைதியாக அனுபவம் செய்து வருகிறது. மேற்கண்ட சொத்தினுள் பக்தர்களின் வசதிக்காக சுமார் ரூ.20 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தியான பீடம் கட்டிடம் கட்டுமானப்பணிகளை பூமி பூஜைவுடன் பக்தர்களின் காணிக்கையை கொண்டு தொடங்கி மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் உரிமை முன்னவர்களில் செல்வமணி, பொது அதிகாரம் பெற்ற முகவர் தனுஷ்கொடி, செல்வமணியின் மாமனாரும், பழைய சீடருமான இடும்பன் உள்ளிட்ட பக்தர்களும் மற்றும் பொதுமக்களும் சேர்ந்து செய்து வந்துள்ளனர்.

மேற்கண்ட கட்டுமாணப்பணிகளும் சுமார் 30% நிறைவடைந்த நிலையில் பக்தர்களின் காணிக்கைகளை கையாடல் செய்துள்ளதாக புகார் எழுந்ததை தொடர்ந்து, கட்டுமாண பணியை நிர்வகித்து வந்த மேற்கண்ட இடும்பன் பணியிலிருந்து தியான பீடத்தால் விலக்கி வைக்கப்பட்டார். இதனால் ஆத்திரமுற்ற இடும்பன், அவரது உறவினர் செல்வமணியின் துணை கொண்டு, கட்டுமாண பணிகளுக்கும், வழக்கமான பூஜை நடவடிக்கைகளுக்கும், மறைமுகமாக பல்வேறு தொல்லைகளை கொடுத்து வந்தார். நிர்வாகிகளும் அமைதியான முறையில் சமாளித்து வந்தனர்.

இதன் தொடர்ச்சியாக பல்வேறு பொய் சங்கதிகளை கண்டு, சட்டப்படி நிலைக்கத்தகாத ஒரு அசல் வழக்கினை மேற்கண்ட செல்வமணியின் தூண்டுதலின் பேரில் அவர்களுக்குள் உட்கை செய்துகொண்டு, மகன் ஜெகதீஸ்வரன் மூலம் மேற்படி சொத்தில் மட்டும் பாகப்பிரிவினை பரிகாரம் கேட்டு, திருச்சி சார்பு நீதிமன்றத்தில் ஒரு அசல் வழக்கினை தாக்கல் செய்து, அதுவும் திருச்சிராப்பள்ளி மாவட்ட முதன்மை சார்பு நிதிமன்றத்தில் அ.வ.எண்.153/2011-ஆக விசாரணையில் இருந்து வருகிறது. இந்த வழக்கில் தியான பீடத்தின் சார்பில் ஆஜராகி நாங்கள் தகுந்தபடி எதிர்வழக்காடி வருகிறோம். மீண்டும் மேற்கண்ட செல்வமணி தனக்கு மட்டும் தெரிந்த காரணத்திற்க்காக தற்பொழுது திருச்சிராப்பள்ளி மாவட்ட 3-வது கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் தியான பீடத்திற்கு எதிராக அவர்களுக்குள் உட்கை செய்து கொண்டு, ஒரு அசல் வழக்கு தாக்கல் செய்து, அதுவும் 1336/2012-டாக விசாரணையில் இருந்து வருகிறது. மேற்கண்ட இருவேறு வழக்குகளிலும், வாதிகள் வழக்கு சொத்தினை தியான பீடத்திற்கு இணாம் செட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எழுதி கொடுத்துள்ளதையும், அதனுள் தியான பீடம் பல லட்சம் ரூபாய் செலவில் கட்டுமாண பணிகள் செய்து, அமைதியாக அனுபவித்து வருவதையும் ஒத்துக்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த 28.08.2012-ம் தேதியில் எதிரிகள் செல்வமணி, ஜெகதீஸ்வரன், இடும்பன், மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 3 நபர்களும் இரும்பு கம்பி, அரிவாள், உருட்டுக்கட்டை போன்ற ஆயுதங்களுடன் சொத்தினுள் அத்து மீறி நுழைந்து, தியான பீடத்தில் அமைக்கப்பட்டிருந்த

சூழத்தை பிடுங்கி எரிந்து, அசிங்கமாக, திட்டி, மிரட்டி சென்றுள்ளார்கள். மேலும் அதே எதிரிகள் தொடர்ந்து 30.09.2012-தேதி காலை சுமார் 10.30-மணியளவில் தியானபீடத்தினுள் அத்துமீறி நுழைந்து, பக்தர்களை அசிங்கமாக திட்டி, இனி இங்கு பூஜைகள் நடக்கக்கூடாது, தொடர்ந்து கட்டுமான பணிகள் செய்யக்கூடாது, மீறியும் நடந்து கொண்டால், தியான பீடத்தில் உள்ளவர்களை வெட்டி கொலைசெய்துவிடுவோம் என்று அரிவாளை காட்டி அனைவரும் மிரட்டியுள்ளார்கள். இதுபொறுத்து எங்களது பீடம் ராம்ஜிநகர் காவல்நிலையத்தில் புகைப்படம் மற்றும் சி.டி ஆதாரங்களுடன் புகார் கொடுக்க சென்றபோது, எதிரிகள் சமரசம் பேசியதால் அந்த முயற்சி கைவிடப்பட்டுள்ளது.

ஆனாலும் மேற்கண்ட எதிரிகள் உண்மை சங்கதிகளுக்கு எதிராக, பொய்யான, அவதூறான, பல்வேறு தகவல்களை பொதுமக்களிடம் பரப்பியும், அதிகாரிகளுக்கு புகார்களை கொடுத்தும், சமூக விரோதிகளை ஏவியும், எங்களை தினமும் மிரட்டி அச்சுறுத்தி வருகிறார்கள். இதனால் எங்களால் அமைதியாக வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாமல், மிகவும் உடல்மன வேதனைகளை அடைந்து வருகிறோம். மேற்கண்ட எதிரிகளின் செயல்கள் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள சங்கதிகளை, நீதிமன்றத்திற்கு வெளியில், சட்டவிரோதமான முறையில், மிரட்டி அச்சுறுத்தி தீர்க்க முயலுவதாக உள்ளது. இது நீதிமன்ற செயல்களை அவமதிப்பதாகவும், பாதிப்பதாகவும் அமைந்துள்ளது.

சொத்தின் உரிமை பொறுத்து நீதிமன்றம் முடிவு செய்வதற்கு முன்பாகவே எதிரிகள் தவறாக முடிவுசெய்திட முயன்று வருகிறார்கள். இது எங்களது சட்டப்படியான சொத்துரிமையையும், வாழ்வுரிமையையும், இந்திய அரசியல் அமைப்பு சாசனத்தால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, முழுமையாக பாதிப்பதாகவுள்ளது.

எப்படியிருப்பினும் நீதிமன்றத்தின் மூலம் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளவும், உரிமை குறித்து முடிவுகாணவும், நீதிமன்ற தீர்ப்புக்கு கட்டுப்பட்டு நடந்துக்கொள்ளவும், எங்களது தியானபீடம் எப்பொழுதும் தயாராகவும், ஒத்துழைப்பாகவும் இருந்து வருகிறது.

ஆகையினால் தயவு செய்து தாங்கள் தலையிட்டு, சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் எதிரிகளின் மீது தகுந்த சட்டபூர்வமான நடவடிக்கைகள் எடுத்து, எங்களுக்கு நியாயம் வழங்கி, எங்களை பாதுகாத்திடும்மாறு மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,

இடம்: திருச்சிராப்பள்ளி.

நாள்: 07.11.2012

நகல்கள்:-

1. மேதகு. ஆளுநர் அவர்கள்,
   தமிழக ஆளுநர் மாளிகை
   சென்னை.

2. உயர்திரு. காவல்துறை பொது இயக்குநர் அவர்கள்,
   (சட்டம் மற்றும் ஒழுங்கு)
   காவல்துறை பொது இயக்குநர் அலுவலகம்,
   சென்னை.

3. உயர்திரு. ஆணையர் அவர்கள்,
   தமிழ்நாடு மனித உரிமை ஆணையம்,
   சென்னை.

4 உயர்திரு. மண்டல காவல்துறை தலைவர் அவர்கள்,
   மண்டல காவல்துறை தலைவர் அலுவலகம்,
   திருச்சிராப்பள்ளி.

5. உயர்திரு. மண்டல காவல்துறை துணைத்தலைவர் அவர்கள்,
   மண்டல காவல்துறை துணைத்தலைவர் அலுவலகம்,
   திருச்சிராப்பள்ளி.

6. உயர்திரு. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   திருச்சிராப்பள்ளி.

7. உயர்திரு. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள்,
   மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம்,
   திருச்சிராப்பள்ளி.

8. உயர்திரு. மாவட்ட காவல் துணைகண்காணிப்பாளர் அவர்கள்,
   மாவட்ட காவல் துணைகண்காணிப்பாளர் அலுவலகம்,
   ஜீயர்புரம், திருச்சிராப்பள்ளி.

9. உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள்,
   ராம்ஜிநகர் காவல்நிலையம்,
   திருச்சிராப்பள்ளி.